DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | விஷ்ணு |
| Father / Husband Name | டில்லி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 15**.05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒழையூர் காலனியில் வசித்து செண்டிங் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன டில்லி எனது அப்பா ஆவார். கடந்த 15.02.2022 ம் தேதி மாலை 3.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது ஒழையூர் கிராமம் அருகே எனது அப்பா எக்சல் இருசக்கர வாகனத்தில் வரும்போது அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் வந்தவர் எனது அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது எனது அப்பா தலையில் அடிப்பட்டு இறந்திருந்தார். எனது அப்பாவின் பிரேதத்தை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றோம். ஆஜர் எதிரியும் அடிப்பட்டு சம்பவயிடத்தில் இருந்தார். ஆஜர் எதிரிதான் அப்பாச்சி இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஆவார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை கேள்விப்பட்டுதான் சென்றேன். போலிசார் விசாரணையில் சம்பவத்தை யார் சொன்னார்கள் என்ற விவரத்தை நான் கூறியுள்ளேன். நான் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றபோது தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். இறந்தவர் எனது அப்பா என்பதால் விபத்து காப்பீடு பெறுவதற்காக நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மோதில்தாஸ் |
| Father / Husband Name | புருஷோத்தமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 15.**05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒழையூர் காலனியில் வசித்து செண்ரிங் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன டில்லி எனது சித்தப்பா ஆவார். கடந்த 15.02.2022 ம் தேதி மாலை 2.50 மணிக்கு சாலவாக்கம் கூட்ரோட்டில் வேலைபார்த்துவிட்டு வரும்போது எனக்கு முன்பாக எனது சித்தப்பா எக்சல் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். ஒழையூருக்கும் பள்ளியகரத்திற்கும் இடையில் சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியின் வண்டி உத்திரமேரூரில் இருந்து செங்கல்பட்டு நோக்கி அப்பாச்சி இருச்சர வாகனத்தில் அதிவேகமாக வந்து என் சித்தப்பா வண்டியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். எனது சித்தப்பாவிற்கு தலையில் அடிப்பட்டது. ஆஜர் எதிரியும் கீழே விழுந்து முகத்தில் அடிப்பட்டிருந்தது. பின்னர் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து எனது சித்தப்பாவை பரிசோதித்ததில் அவர் இறந்துவிட்டார். காயம் பட்ட எதிரியை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் எனது சித்தப்பாவின் பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். இது சம்மந்தமாக விஷ்ணு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் நடந்த அன்று நான் சாலவாக்கம் கூட்ரோட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். நான் பல்சர் பைக்கில் சென்றுகொண்டிருந்தேன். போலிசார் விசாரணையில் நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் அது குறித்து விசாரிக்கவில்லை. விபத்தை நான் சத்தம் கேட்டு தான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் நேரடியாக பார்த்தேன். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்தும் காவல் நிலையத்தில் வைத்தும் விசாரணை செய்தார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் இறந்தவர் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர் எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ஜனார்த்தனன் |
| Father / Husband Name | ரங்கன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 15.05.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒழையூர் காலனியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன டில்லி எனது பக்கத்து ஊர்காரர் ஆவார். கடந்த 15.02.2022 ம் தேதி மாலை சுமார் 2.45 மணியளவில் ஒழையூர் பேருந்து நிலையத்தில் இருந்தபோது சுமார் 10 அடி தூரத்தில் கூட்டமாக இருந்த இடத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த டில்லி என்பவருக்கு உத்திரமேரூரில் இருந்து செங்ல்பட்டு நோக்கி சென்ற இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு டில்லி சம்பவயிடத்தில் இறந்துவிட்டார். பின்னர் ஆம்புலன்சில் டில்லி பிரேதத்தை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். டில்லியின் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய பிரேதவிசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்து குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்தவர் எனது பக்கத்து ஊர்காரர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர் எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மோகன்ராஜ் |
| Father / Husband Name | பாலகிருஷ்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 15.**05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கைத்தண்டலம் கிராமத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன டில்லி எனது பக்கத்து ஊர்காரர் ஆவார். கடந்த 15.02.2022 ம் தேதி மாலை 3.00 மணிக்கு நான் உத்திரமேரூர் செல்வதற்காக ஒழையூர் பேருந்து நிலையம் சென்றபோது அங்கு கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தபோது சாலவாக்கத்தில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்த டில்லி மீது உத்திரமேரூரில் இருந்து செங்கல்பட்டு நோக்கி சென்ற அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் வந்தவர் டில்லி மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார். அப்பாச்சியில் வந்த நபரை ஆம்புலன்சில் அனுப்பி வைத்திருந்தார். டில்லி தலையில் அடிப்பட்டு சம்பவயிடத்தில் இறந்திருந்தார். அவரின் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்து எவ்வாறு நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பேருந்து நிறுத்தத்தின் அருகே கூட்டமாக இருந்ததால் நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். இறந்தவர் எனது பக்கத்து ஊர்காரர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜர் எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ராமன் |
| Father / Husband Name | முனுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 15.**05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒழையூர் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். சாட்சி தியாகராஜனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 15.02.2022 ம் தேதி மாலை 6.15 மணிக்கு ஒழையூருக்கும் பள்ளியகரத்திற்கும் இடையே எங்கள் ஊரை சேர்ந்த டில்லி என்பவருக்கு ஏற்பட்ட விபத்து இடத்தை பார்ப்பதற்காக நானும் தியாகராஜனும் சென்றோம். சம்பவயிடத்தில் போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் தியாகராஜனும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் போலிசார் படித்து காட்டினார்கள் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். நான் சம்பவயிடம் அருகே சென்ற போது போலிசார் என்னை அழைத்து கையொப்பம் கேட்டார்கள் என்றால் சரியல்ல. விபத்து எவ்வாறு நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்தவர் எனது ஊர்காரர் என்பதால் அவருக்கு பவ்யப்பட்டு நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 518/2024

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜர் எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | தியாகராஜன் |
| Father / Husband Name | சுப்ரமணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 15.**05.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒழையூர் வசித்து விவாசய வேலை செய்து வருகிறேன். சாட்சி ராமனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). கடந்த** 15.02.2022 ம் தேதி மாலை 3.00 மணிக்கு டில்லி என்பவருக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு நானும் ராமனும் மருத்துவமனை சென்று பார்த்துவிட்டு மீண்டும் ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது மாலை 6.15 மணிக்கு சம்பவயிடத்தில் போலிசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் நானும் ராமனும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. தட்டச்சு செய்த தாளில் கையொப்பம் செய்தேன். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்து மாலை 5.00 மணியளவில் கிளம்பினேன். சம்பவயிடத்தில் நானும் சாட்சி ராமனும் மற்றும் போலிசார் மட்டும் தான் இருந்தார்களா என்றால் இல்லை. பொது மக்களும் நின்று கொண்டிருந்தார்கள். தட்டச்சு செய்த தாளில் என்ன விவரம் இருந்தது என்ற விவரம் படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்தேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் இறந்தவர் எனது ஊர்காரர் என்பதாலும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.